

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | மே 06, 2021 | புரட்சி 20 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00

# நடந்தது ஆட்சி மாற்றமல்ல; தமிழ்நாட்டின் அடையாள மீட்புப் போர்!

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அணி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. தமிழ்நாடு தனது அடையாளத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. இதற்கான தேர்தல் களத்தை திட்டமிட்டு கடும் உழைப்பால் உருவாக்கி வெற்றிக்கு உரமிட்ட பெருமை திமுகத் தலைவர் மு.க.ஸ்டாலினையே சாரும், வரலாறு பாராட்டும், வாழ்த்தும்.



பெரியார் மண், தனக்கான இயல்பான அடையாளங்களான சுயமரியாதையையும், சமூக நீதியையும் அழித்து ஒழிப்பதற்கான ஒரு யுத்தத்தை கடந்த 10 ஆண்டுகளாக தமிழகம் எதிர்கொண்டது. இந்த போர்க்களத்தில் இந்திய அதிகார மய்யங்களும் அதன் நிறுவனங்களும், அடக்குமுறைகளும் எதிரிகளால் ஆயுதங்களாக களத்தில் இறக்கப்பட்டன. நிராயுதபாணிகளான நாம் சுயமரியாதை எனும் கேடயத்தையும், பெரியார், அண்ணா, காமராசர், கலைஞர் விட்டுச் சென்ற கொள்கை கவசங்களையும் ஏந்தி நின்று போராடினோம்.

நாடாளுமன்றத் தேர்தல் வழியாக தமிழ்நாட்டில் ‘இராம இராஜ்ஜியம்’ அமைக்க முயன்ற சக்திகளை தமிழ்நாட்டில் கால் ஊன்ற விடாமல், மீண்டும் வடக்கு நோக்கி நாம் அனுப்பி வைத்தோம். அந்தக் களத்திலும் உரிய கூட்டணி வியூகம் அமைத்து வெற்றி வாகை சூடிய பெருமை மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு.

தோற்று ஓடிய சனாதன சக்திகள் சட்டமன்றத் தேர்தல் மூலம் அதிகாரங்களை தங்களது விசுவாசிகள் வழியாக டெல்லி ஆதிக்க வரம்புக்குள் கொண்டு வந்து விடலாம் என்று திட்டமிட்டார்கள். அதற்காக பல சூழ்ச்சிகளை உருவாக்கினார்கள். சூப்பர் ஸ்டார்களை களமிறக்க காய் நகர்த்தினார்கள். கூட்டணி கட்சியான அ.இ.அ.தி.மு.க.வின் ஒரு பகுதியையே உடைத்து தங்களுடன் இணைத்துக் கொள்ள திட்டமிட்டார்கள். ஆனால், அத்தனை முயற்சிகளும் தமிழ்நாட்டில் வெற்றி பெற முடியவில்லை. வேறு வழியின்றி தங்களுக்குப் பணிந்து போய்க் கொண்டிருக்கிற அ.இ.அ.தி.மு.க கூட்டணிக்குள் அடைக்கலமாகி அதன் வழியாக தமிழ்நாட்டின் அதிகாரத்தை தங்கள் கையில் வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். இந்தப் போரிலும் அவர்கள் தோல்வியைச் சந்தித்து இருக்கிறார்கள். திமுக அணி இதில் வெற்றி பெற்று இருக்கிறது.

தேர்தல் பணிகள் தற்போது முடிந்து விட்டன. நாம் மீண்டும் சமுதாய களத்திற்கு திரும்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஒவ்வொரு தேர்தல் வரும்போதும் அது ஜாதி வெறியை தூண்டிவிட்டுவிடுகிறது. தற்போது நடந்து முடிந்துள்ள தேர்தலிலும் இதைத்தான் நாம் பார்த்தோம். ஜாதி எதிர்ப்புக் களத்திற்கு எந்த அரசியல் கட்சியும் வரப்போவதில்லை. பெரியார் இயக்கங்கள் உள்ளிட்ட சமுதாய இயக்கங்கள் தான் இந்தப் போராட்டங்களை நடத்துகின்றன, நடத்தவும் முடியும். இந்த நிலையில் இழந்தவைகளை மீட்கவும், பண்பாட்டுத் திணிப்புகளை முறியடிக்கவும், தன்னாட்சி உரிமைக்கு மக்களை தயார் செய்யவும் நாம் களமிறங்குவதோடு திராவிட எதிர்ப்பு என்ற போர்வைக்குள் பதுங்கி நிற்கும் சனாதன சக்திகளையும் நாம் மக்களிடத்தில் அம்பலப்படுத்தியாக வேண்டும்.

**நம்மைப் பொருத்தவரை நடந்து முடிந்த தேர்தல் வெறும் ஆட்சி மாற்றம் அல்ல. சனாதன சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுப்பதற்கான போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி.**

தமிழர்களிடம் மதவெறி சனாதன எதிர்ப்பபுக் கருத்துக்களைக் கொண்டு சென்றதில் தேர்தலிலே பங்கெடுக்காத சமுதாய இயக்கங்களுக்கு பெரும் பங்கு உண்டு. ஆனாலும் இந்தத் திராவிட இயக்க உணர்வுகளை அரசியல் சக்திகளாக்கி கடுமையான உழைப்பைத் தந்து கூட்டணிகளை அரவணைத்து அதை வெற்றிக் கனியாகப் பறித்துள்ள பெருமை மு.க.ஸ்டாலினுக்கு உண்டு. முதிர்ந்த பக்குவத்துடன் அவர் முதல்வர் பதவியில் அமரப்போகிறார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்காக அவர் என்ன செய்யப்போகிறார்?

உரிமைகளை மீட்டெடுக்க அவர் என்ன திட்டங்களை வைத்திருக்கிறார் என்பதை தமிழகமே ஆவலோடு நம்பிக்கையுடன் காத்திருக்கிறது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திமுக ஆட்சிக்கு நம்முடைய மகிழ்ச்சிகள், வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

**விடுதலை இராசேந்திரன்**
**பொதுச் செயலாளர்**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

## ‘வெற்றிவேல்; வீரவேல்’ பா.ஜ.க.வை கைவிட்டது!

கந்தசஷ்டி விவகாரத்தை கையிலெடுத்து, முருகனை வைத்தே பாஜகவின் சட்டமன்ற தேர்தல் கள வியூகம் இருந்தது. அறுபடை வீடுகளிலும் தொண்டர்களை திரட்டி எல்.முருகன் அரசியல் ஆதாயம் தேட முற்பட்டார்.

மோடி, அமித் ஷா என வடக்கில் இருந்து வந்த பாஜக தலைவர்களும் கையில் வேல் எடுத்து வெற்றிவேல் வீரவேல் என முழங்கினர்.

வீடுதோறும் வேல் பூஜை நடத்தவும் பாஜக அறைகூவல் விடுத்தது. கமலாலயத்தில் எல்.முருகன் தலைமையேற்று நடத்தினார்.

வீடுகளில் முருகன் படமே இல்லாத ஹெச்.ராஜா, நாரா யணன் போன் றோர் காலண்டர் அட்டைகளையும், அட்டை வேலையும் வைத்தாவது பூஜையை வெகு சிறப்பாக நடத்தினர்.

ஆனாலும் பாஜக மீது சிறு கரிசனம்கூட காட்டாமல் கந்தன் கைவிட்டு விட்டாரே! அறுபடை வீடுகளில் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் திமுகவே வெற்றி பெற்றிருக்கிறது. கூடுதலாக ஆட்சியிலும் அமர்ந்திருக்கிறது.

திருச்செந்தூர் – திமுக வேட்பாளர் அனிதா ராதா கிருஷ்ணன் வெற்றி

பழனி – திமுக வேட்பாளர்– பெ.செந்தில்குமார் வெற்றி

சுவாமிமலை ( கும்பகோணம் ) – திமுக வேட்பாளர் அன்பழகன் வெற்றி

திருத்தணி – திமுக வேட்பாளர் எஸ். சந்திரன் வெற்றி

பழமுதிர்சோலை ( மதுரை கிழக்கு) – திமுக வேட்பாளர் பி.மூர்த்தி வெற்றி

திருப்பரங்குன்றத்தில் மட்டும் அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பா வெற்றி. (குறிப்பு: இங்கே திமுக போட்டியிடவில்லை. கூட்டணி கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போட்டியிட்டது)

**– ர. பிரகாசு**

### ஆங்கில நாளேட்டில் ஆய்வாளர்கள் கட்டுரை

## மதம் – ஜாதி – இனவாதங்களை முறியடித்து திராவிடம் பெற்ற வெற்றி

எதிர்காலத் தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் வழிகாட்டக் கூடிய வாய்ப்புகளை தி.மு.க.வின் வெற்றி உருவாக்கியிருக்கிறது என்று சமூகப் பொருளியல் ஆய்வாளர்கள் ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (மே 3, 3031) எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ‘எம்.அய்.டி.எஸ்.’ ஆய்வு மய்ய பேராசிரியர் விஜய் பாஸ்கர், இலண்டன், ‘கிங்க்ஸ் இன்ஸ்ட்டியூட்’ ஆய் வாளர் விக்னேஷ் கார்த்திக், அமெரிக்காவில் பிரவுன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலையரசன் ஆகியோர் இணைந்து இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதி யுள்ளனர். கட்டுரையின் சுருக்கமான கருத்துகள்.

இந்தத் தேர்தல் முடிவுகளை தமிழ் நாட்டின் எதிர்காலத்துக்கு, இந்தியாவின் எதிர்காலத்தையும் இணைத்தே பார்க்க வேண்டியிருக்கிறது. தேர்தல் களத்தில் மூன்று அடிப்படை வாதங்கள் முன்னிறுத்தப்பட்டன. ஒன்று மத அடிப்படை வாதம் (பா.ஜ.க.), மொழி இன அடிப்படை வாதம் (நாம் தமிழர் கட்சி), ஜாதி அடிப்படை வாதம் (தலித் முன்னேற்றத்தை விரும்பாத சில இடைநிலை ஜாதிக் குழுக்கள்). இந்த மூன்று அடிப்படை வாதங்களும் ஒன்றாக கைகோர்த்துக் கொண்டு, ‘திராவிட - தமிழ்’ அடையாளத்துக்கு சவால்விட்டு எதிர்த்தன. தமிழ்நாட்டில் ‘திராவிட - தமிழ்’ அடையாளம் என்பது அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு வழியமைத்தது. தி.மு.க.வைப் பொறுத்தவரை இந்த மூன்று அடிப்படை வாதங்களையும் எதிர்க்க வேண்டியிருந்தது. அத்துடன் திராவிட அடையாளமான மாநில சுயாட்சியையும் தி.மு.க. பேசியது.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரை தேர்தல் களத்தில் வலுவான கட்சியல்ல என்றாலும், ‘திராவிட’ கோட்பாட்டின் கீழ் மக்களை அணி திரட்டு வதற்கு எதிரான கருத்துகளை பா.ஜ.க. தனது கொள்கையாக முன் வைத்தது. கடந்த காலங்களைப்போல் இந்து மத அடையாளத்தை மட்டும் பேசாமல், ஈழத் தமிழர் பிரச்சினையையும், ‘தமிழ்க் கடவுள்’ முருகன் என்ற அடையாளத்தையும் முன்னிறுத்தி வேல் யாத்திரையையும் நடத்தி, தமிழ்த் தேசிய உணர்வுகளோடு மதத்தை இணைத்துக் கொண்டு தி.மு.க.வை எதிர்த்தது. ‘திராவிடம்’ என்பது பிரிட்டிஷார் உருவாக்கிய பிரித்தாளும் கொள்கை; தமிழர்களின் கடந்த கால வரலாறுகள் சமயம் சார்ந்தவை என்பதாகப் பேசியது.

பா.ஜ.க.வின் ‘தமிழர் மத’ அடையாளத்துக்கு வலிமை சேர்த்தது நாம் தமிழர் கட்சி.

(4ஆம் பக்கம்)

## பார்ப்பன உறுப்பினர்களே இல்லாத சட்டமன்றம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 3 பார்ப்பனர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

மயிலாப்பூர் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் ஒய்வு பெற்ற காவல்துறை அதிகாரி நடராஜனும், காரைக்குடி தொகுதியில் பா.ஜ.க. சார்பில் எச். ராஜாவும், கோவை தெற்கு தொகுதியில் மக்கள் நீதி மய்யம் சார்பில் கமலகாசனும் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினர்.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது தன்னை 'பாப்பாத்தி' என்று சட்ட மன்றத்தில் அறிவித்தார். முழு அதிகாரமும் ஜெயலலிதா ஒருவரிடம் மட்டுமே இருந்தது.

கடந்த சட்டமன்றத்தில் நடராஜன், மயிலாப்பூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்.

## தி.மு.க. வேட்பாளர்களில் 73 சதவீதம் பேர் வெற்றி

தி.மு.க. 173 தொகுதிகளில் போட்டியிட்டு 125 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 73 சதவீத வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

ம.தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி வேட்பாளர்கள் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர். மொத்தம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் 133.

தி.மு.க.வின் கூட்டணியில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ் 25 இடங்களில் போட்டியிட்டு 18 இடங்களிலும், சி.பி.அய். 6 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களிலும், சி.பி.அய்.எம். 6 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களிலும், விடுதலை சிறுத்தைகள் கட்சி 6 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களிலும் (இதில் 2 பொதுத் தொகுதிகளும் அடங்கும்), ம.தி.மு.க. 6 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களிலும், கொ.ம.தே.க. 3 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்திலும், மனித நேய மக்கள் கட்சி 2 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

### அ.தி.மு.க. அணி

அ.தி.மு.க. அணி 75 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதில் 179 இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க. 65 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 37 சதவீதம் வெற்றி.

கூட்டணியில் இடம் பெற்ற பா.ம.க. 5 இடங்களிலும் (போட்டியிட்டது 23), பா.ஜ.க. 4 இடங்களிலும் (போட்டியிட்டது 20) வெற்றி பெற்றுள்ளது. புரட்சி பாரதம் ஒரு இடத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. தமிழ் மாநில காங்கிரஸ் 7 இடங்களில் போட்டியிட்டு அனைத்திலும் தோல்வியைத் தழுவியது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகம், பசும்பொன் தேசிய கழகம் தலா ஒரு இடத்திலும், பெருந்தலைவர் மக்கள் கட்சி ஒரு இடத்திலும், மூவேந்தர் முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும் போட்டியிட்டு தோல்விகளைத் தழுவின.

## கோயில் நகரங்களைக் கைப்பற்றிய தி.மு.க.

திருத்தணி, திருவொற்றியூர், மயிலாப்பூர், காஞ்சீபுரம், திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சி, ஸ்ரீரங்கம், பழனி, கும்பகோணம், மதுரை, சங்கரன்கோவில், திருச்செந்தூர் ஆகிய நகரங்கள் பக்தர்களால் ஆன்மிக நகரங்களாகக் கருதப்படுபவை. இந்த தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்று அதனை தங்கள் வசப்படுத்தி உள்ளனர்.

தேர்தல் நேரங்களில் மதத்தை அடிப்படையாக கொண்டு முன்வைக்கப்பட்ட பிரச்சாரங்கள் பொது மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதை இந்த தேர்தல் முடிவு உணர்த்துகிறது.

## தலித் – பெண்கள் – குரலற்றவர்களின் 'சரணாலயமாக' தி.மு.க. ஆட்சி விளங்கட்டும்

# மு.க. ஸ்டாலினுக்கு காந்தியின் பேரன் வேண்டுகோள்

காந்தி பேரனும், மேற்கு வங்க முன்னாள் ஆளுநருமான கோபாலகிருஷ்ண காந்தி, முதல்வராக பொறுப்பேற்கும் மு.க. ஸ்டாலினுக்கு பாராட்டுகளைத் தெரிவித்து பகிரங்க கடிதம் ஒன்றை 'இந்து' ஆங்கில நாளேட்டில் (மே 3, 2021) எழுதியுள்ளார், அக் கடிதத்தின் சுருக்கம்:

"முதலில் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். 'திராவிடன் மாடல்' ஆங்கில நூல் வெளியிட்டு விழாவில் பேசிய 'இந்து' குழும தலைவர் என். ராம், தமிழகத்தில் அமையவிருக்கும் ஆட்சி ஓர் புதிய மாதிரியான ஆட்சியாக (New Type of Government) இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டார். அது என்ன புதிய மாதிரி என்பதைக் கூறுவதற்கு முன் எனது சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். இதை ஒரு வயது முதிர்ந்தவரின் அறிவுரையாகக் கருதி விடாமல் சகக் குடிமகனின் வேண்டுகோளாகக் கருத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமெரிக்காவில் அதிபர் ஜோ பைடன் சில மாதங்களுக்கு முன் கொரானா பெருந்தொற்று காலத்தில் பதவியேற்ற நிகழ்வு போலவே நீங்களும் பதவி ஏற்கப் போகிறீர்கள். இந்திய வரலாற்றில் இப்படி ஒரு முதல்வர் பதவி ஏற்பு இதற்கு முன் நிகழ்ந்தது இல்லை. கொரனா இரண்டாவது அலையை மக்களாகிய நாங்களே வரவழைத்துக் கொண்டோம். தொற்றின் ஆபத்துகளை உணராமல் செயல்பட்டதற்கு கொடுத்த விலை இது. நாங்கள் உங்களுககு வெற்றியை மட்டும் பரிசாக வழங்க வில்லை. 'வைரஸ்'யையும் சேர்த்து வழங்கியிருக் கிறோம்.

தமிழ்நாடு மிகச் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு கொண்ட மாநிலம். அதற்கான தொடர்ச்சியான பெருமைகளைப் பெற்று நிற்கிறது. உங்களது அனைத்து முயற்சிகளுக்கும் இந்த சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு துணை நிற்கும். 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டும் தடுப்பு ஊசி போடப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பு ஊசி போட வேண்டும் என்று நீங்கள் கேட்டிருப்பது மக்கள் மீதான உங்கள் கவலையை வெளிப்படுத்துகிறது. தடுப்பு ஊசியை இலவசமாகவே வழங்க மத்திய அரசை வற்புறுத்துங்கள். முயற்சி வெற்றி பெறாவிடில் துணிந்து மாநில அரசே அதற்கான விலை கொடுத்து இலவசமாகப் போடுங்கள்.

மருத்துவ சேவையாளர்களின் அர்ப் பணிப்பை உங்களைப் போன்ற தலைவர்கள் தான் ஊக்கப்படுத்த வேண்டும்; தடுப்பு ஊசி முகக் கவசம் அணிவதை மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டுங்கள். ஊரடங்குகளை செயல்படுத்துவதில் மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே கடுமையான நடவடிக்கை களை எடுத்த நல்லப் பயனை அளித்துள்ளது. அவரது ஆலோசனையைக் கேளுங்கள்.

'புதிய மாதிரி ஆட்சி' என்பதை நிரூபிக்க சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். நீங்கள் திராவிடக் குடும்பத்தின் குழந்தை. அந்தக் கொள்கையோடு வளர்க்கப்பட்டுள்ளீர்கள். தமிழர்களின் உணர்வுகளுக்கான இயக்கம் திராவிட இயக்கம் என்பது உண்மை தான். அதேநேரத்தில் தமிழர்களுக்குள்ளேயே தரும் குரலற்றவர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக, வெளிச்சத்துக்கு வர முடியாதவர்கள் ஏராள மான மக்கள் இருக்கிறார்கள். எண்ணிக்கையில் அவர்கள் குறைவானவர்கள். இந்த மக்களின் மேம்பாட்டுக்கு உங்கள் ஆட்சி திட்டமிட வேண்டும். பண்பாடு, பொருளாதாரம் மற்றும் சமூக அடிப்படையில் அன்றாடம் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் விளிம்பு நிலையில் தவிக்கும் இந்த சமூகத்தினருக்கு அடைக்கலம் தரும் 'சரணாலயமாக' உங்கள் ஆட்சி திகழ வேண்டும்.

நல்ல எண்ணிக்கையில் எதிர்கட்சியாக வந்திருக்கும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உரிய மதிப்பளியுங்கள். மூன்றாவதாக கருத் துரிமைக்கும் ஜனநாயக மாண்புகளுக்கும் மதிப் பளிக்க வேண்டும். மக்களிடம் கருத்துகளைப் பரப்பி வளர்ந்தது தானே திராவிட இயக்கம்?

மூன்றாவதாக - எவ்வளவு உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் ஊழல் செய்தாலும் துணிந்து நடவடிக்கை எடுங்கள். தயவுதாட்சண்யம் பார்க்காதீர்கள்.

நான்காவதாக - பெண்கள், தலித்துகள், அரசியலில் - ஆட்சி அமைப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் பெறாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அதிகாரம் நிறைந்த இரண்டு குழுக்களை நியமித்து அதில் இடம் பெற்றுள்ள ஆலோசகர் களின் கருத்துகளைக் கேட்டு செயல்படுத்துங்கள்.

ஐந்தாவதாக - மீனவர்கள், விவசாயிகள் நலனுக்கான சாமிநாதன் குழு பரிந்துரையை அமுல்படுத்துங்கள்.

ஆறாவதாக - நீர் நிலைகள் மாசுபடாமல் சுற்றுச் சூழலைக் காப்பாற்றும் திட்டங்களில் கவனம் செலுத்துங்கள்.


ஏழாவதாக - சிறைச்சாலையின் மோசமான நிலையை திருத்தி அமையுங்கள்; விசாரணைக் கைதிகளாக பல அப்பாவிகள் சிறைகளுக்குள் பல்லாண்டு காலம் அடைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு தருவதற்கும் விடுதலை செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற் கொள்ளுங்கள்.

ஒன்பதாவதாக - தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்து விடாதீர்கள்; ஆட்சியை சரியாக வழி நடத்துவதற்கு பெரும் துணை செய்யக் கூடிய சட்டம் இது.

எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் அரசியல் சட்டம் வலியுறுத்தும் முகப்புரையை உள்ளத்தில் நிறுத்துங்கள். இதுவே 'புதிய மாதிரி ஆட்சி'க்கான அடிப்படைகளாக நான் கருதுகிறேன்"

- என்று அந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

## தட்டிக் கேட்க வேண்டும்!



மகாத்மா கூறுகிறார் என்றோ, மகான் கூறுகிறார் என்றோ, சாஸ்திரம் கூறுகிறது என்றோ, கடவுள்கள் சொன்னார்கள் என்றோ நீங்கள் ஏமாந்து போய்விடக் கூடாது. அந்த மகான்களும் அவர்களின் சாஸ்திர புராணங்களும் அந்தக் காலத்திற்குத் தேவையாயிருந்திருக்கலாம். அவற்றை நம்ப வேண்டுமென்ற கட்டாயமும் அந்தக் கால மக்களுக்குப் பொருத்தமாய் இருந்திருக்கலாம்.

ஆனால், இந்தக் காலத்திற்கு அவை பயன்படக்கூடியவை அல்ல. அவற்றை நம்பி அவற்றின் படி நடப்பது முட்டாள்தனமாகும். அப்படிச் செய்வது, போன வருடத்திய 'இரயில்வே கைடை' – கால அட்டவணையைக் கொண்டு – இந்த வருடம் ரயிலுக்குப் போவதை ஒக்கும். அப்படிச் செல்லாதவைகளாகிவிட்ட அவற்றை நம்பினால், ஏதாவது பலன் இன்று கிடைக்குமா? அந்த சாஸ்திர புராணங்களுக்குக் கட்டுப்பட்டு நீ 'என்னாங்கோ எஜமானே' என்றால், அவன் 'ஏண்டா பறப்பயலே' என்கிறான். அதை விட்டு, 'நான் ஏன் சூத்திரன், நீ ஏன் பிராமணன் ?' என்று கேட்டு வருவதுபோல், 'நான் ஏன் பறையன், நீ ஏன் எஜமான்?' என்று கேளுங்கள். அவன் வழிக்கு வருகிறானா இல்லையா பாருங்கள்.

**'விடுதலை'** 29.2.1948

# பொதுத் துறை நிறுவனங்களை அழித்தொழிக்கும் பாஜகவின் பாதை

2021-22ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் உரையில் பொதுத்துறை நிறுவனங்களுக்கான புதிய கொள்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார். புதிய கொள்கையில், பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து மத்திய அரசின் முதலீட்டை திரும்ப பெறுவதற்கான பாதை வகுக்கப்பட்டிருப்பதாக நிர்மலா சீதாராமன் கூறினார். குறிப்பிட்ட சில துறைகளை தவிர மற்ற அனைத்தும் தனியார் மயமாக்கப்படும் என்றும் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

**தனியார்மயமாக்கப்படும் துறைகளாக அறிவிக்கப்பட்டவை:**

கொரோனா பெருந்தொற்று பரவலைத் தொடர்ந்து இந்தியாவில் பொதுமுடக்கம் கடுமையாக அமல்படுத்தப்பட்டிருந்த 2020ஆம் ஆண்டு மே மாதத்தில் மத்திய அரசு ஆத்மநிர்பார் பாரத் (தற்சார்பு பொருளாதாரம்)) திட்டம் குறித்த விவரங்களை வெளியிட்டது. அணு ஆற்றல், விண்வெளி, பாதுகாப்பு, போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை ஆற்றல், நிலக்கரி, சுரங்கம், நிதி சேவைகள், வங்கிகள், காப்பீடு உள்ளிட்ட முக்கிய துறைகளை தனியார் மயமாக்குவதற்கான கொள்கைகள் அதில் வெளியிடப்பட்டன.

தனியார் மயமாக்குவது மட்டுமின்றி மற்றொரு பக்கம், நன்கு இயங்கிக் கொண்டிருக்கிற பொதுத் துறை நிறுவனங்களுடன் நட்டத்தில் விழுந்த நிறுவனங்களை இணைப்பது, இழுத்து மூடுவது போன்ற அறிவிப்புகளும் இடம் பெற்றிருந்தன. மொத்தத்தில் பொதுத் துறை நிறுவனங்களை சுருக்குவதும், தனியார் துறையில் புதிய முதலீடு களுக்கு வித்திடுவதுமே இக்கொள்கை.

**தனியார்மயமாக்கல் குறித்த விவாதங்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?**

2014ஆம் ஆண்டில் நரேந்திர மோடி தலைமையிலான அரசு அமைந்த நாளிலேயே பொதுத்துறை முதலீடுகளை திரும்பப் பெறுவதற்கான தீவிர உத்திகள் வகுக்கப்பட்டுவிட்டன. மத்திய அரசு தொழில்துறையில் ஈடுபடாது என்று அப்போதே அவர்கள் அறிவித்தது, தனியார்மயத்துக்கான அவர்களின் பாதையை தெளிவாகக் காட்டியது. குறிப்பாக முதல் 5 ஆண்டுகால ஆட்சியில் ஏர் இந்தியாவின் 76 விழுக்காடு பங்குகளை விற்பதாக மத்திய அரசு அறிவித்தது, சில பொதுத்துறை நிறுவனங்களை மற்ற நிறுவனங்களுடன் இணைத்தது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

50,000 கோடி ரூபாய்க்கும் மேல் வீழ்ச்சியை சந்தித்த ஏர் இந்தியா நிறுவனத்தின் பங்குகளை வாங்க யாரும் முன்வராத நிலையில், இரண்டாவது முறை பாரதிய ஜனதா ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 100 விழுக்காடு பங்குகளையும் விற்பனை செய்வதாக புதிய அறிவிப்பு வெளியிட்டது. ஒருகாலத்தில் லாபத்தில் இயங்கிக் கொண்டிருந்த ஏர் இந்தியாவுடன், நட்டத்தில் வீழ்ந்த இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் 2007ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட பின்புதான் இதன் சரிவு தொடங்கியது.

இப்போது பாரத் பெட்ரோலியம், இந்திய கப்பல் போக்குவரத்து கழகம், கன்டெயினர் கார்பரேசன் ஆஃப் இந்தியா, பவன் ஹன்ஸ் போன்ற நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கான பணிகள் தொடங்கிவிட்டன. ஆனால் பெருந்தொற்று காலத்தில் நிறுவனங்கள் முதலீடு செய்வதில் தயக்கம் காட்டிவருகின்றன. ஆனால் தனியார்மயமாக்கத்தின் வழியாக, பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிலையற்ற தன்மையை ஏற்படுத்துவதற்கான சூழல்களை மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா அரசு சீராக ஏற்படுத்திவிட்டது என்பதை மறுக்க இயலாது.

தற்போது கையிருப்பில் உள்ள 439 பொதுத் துறை நிறுவனங்கள் மட்டும் அதன் துணை நிறுவனங்களில், 151 நிறுவனங்களை மூடுவது அல்லது விற்பது என மத்திய அரசின் புதிய தொழில் கொள்கையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இதற்கு முன்பு இல்லாத வகையில் பொதுத்துறை வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் முதலீடுகளை திரும்பப் பெறும் உத்திகளும் வகுக்கப்பட்டுள்ளன. விஜயா வங்கி, தேனா வங்கி ஆகியவை கடந்த ஆண்டில் பரோடா வங்கியுடன் இணைக்கப்பட்டன. 10 பொதுத் துறை வங்கிகளை இணைத்து வெறும் நான்காகக் குறைக்கப்போவதாக நடப்பாண்டுக்கான பட்ஜெட் உரையில் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

**தனியார் மயமாக்க தனி அமைச்சகம் அமைத்த வாஜ்பாயி**

பொதுத்துறை முதலீடுகளை முழு வீச்சில் விற்பதற்கான பணிகளை மோடி அரசு கையாண்டு வரும் நிலையில், இதன் தொடக்கப் புள்ளி வாஜ்பாயி தலைமையிலான பாஜக ஆட்சிக்காலத்திலேயே வைக்கப்பட்டுவிட்டது. 1999 முதல் 2004 வரையிலான வாஜ்பாயி ஆட்சிக்காலத்தில் பொதுத்துறை முதலீடுகளை விற்பனை செய்வதற்காகவே அருண் ஜெட்லி தலைமையிலும், பின்னர் அருண் சோரி தலைமையிலும் தனி அமைச்சகம் இயங்கியது. பங்குகளை விற்பதற்கான உத்திகளை இந்த அமைச்சகம் வகுத்தது.

1999 முதல் 2004 வரையிலான அடல்பிகாரி வாஜ்பாயி ஆட்சிக்காலத்தில் மாடர்ன் ஃபுட்ஸ், பால்கோ, ஹிந்துஸ்தான் ஜிங்க், வி.எஸ்.என்.எல் உள்ளிட்ட 12க்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் தனியாருக்கு விற்கப்பட்டன.

அப்போதே ஏர் இந்தியாவை விற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அரசியல் ரீதியான எதிர்ப்புகள் காரணமாக கைவிடப்பட்டது. 1990களிலேயே பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை சிறிய அளவில் பங்குச் சந்தையில் பட்டியலிடும் முறை தொடங்கிவிட்டது. பின்னர் 2004 முதல் 2014 வரை ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக் காலத்திலும் இது தொடர்ந்தது.

**மோடி ஆட்சியில் விற்பனைக்கு வரும் பொதுத் துறை நிறுவனங்கள்**

ஏர் இந்தியா, பிபிசிஎல் உள்ளிட்ட சில நிறுவனங்களை முழுமையாக விற்பனை செய்துவிடுவோம் என கடந்த ஆண்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். 2 பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஒரு காப்பீட்டுத்துறை நிறுவனத்தை தனியாருக்கு விற்கப்போவதாகவும் நிதிநிலை அறிக்கை தாக்கலின்போது நிர்மலா சீதாராமன் கூறினார். பொதுத்துறை நிறுவனங்களில் பெரும் லாபமீட்டும் நிறுவனமாக உள்ள எல்.ஐ.சி-யை பங்குச்சந்தையில் பட்டியலிடவும் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள். அதேபோல எல்.ஐ.சி.-யின் 25 விழுக்காடு பங்குகளை விற்பதற்கான திட்டங்களும் கொரோனா காலத்திலேயே மத்திய அரசால் வகுக்கப்பட்டது.

2021-22ஆம் நிதியாண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையின்படி, ரூ.1.75 லட்சம் கோடி மதிப்பிலான பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை இந்த ஆண்டுக்குள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக நடப்பு நிதியாண்டில் ரூ.2.10 லட்சம் கோடி மதிப்பிலான பொதுத்துறை பங்குகளை விற்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இது கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 20,000 கோடி ரூபாய் அதிகமாகும். இவற்றை செயல்படுத்தியே தீருவோம் என்ற குரல்களும் அரசுத் தரப்பில் இருந்து ஓயாமல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. நிதியமைச்சரின் பணியே பொதுத் துறை நிறுவனங்களை இழுத்து மூடுவதும், விற்பதும் என்பதாகவே கடந்த 2 ஆண்டுகால நிர்மலா சீதாராமனின் செயல்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. வணிகம் செய்வது அரசின் வேலையல்ல என்ற பிரதமர் மோடியின் பேச்சும் இதன் நீட்சியாகவே தெரிகிறது.

**பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்படுமா அல்லது நீடிக்குமா?**

அரசின் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் பொதுத்துறை நிறுவனங்களின் இருப்பை தக்க வைக்க வேண்டுமென்றும், மற்ற நிறுவனங்களை தனியார்மயமாக்கலாம் அல்லது பிற நிறுவனங்களுடன் இணைக்கலாம் அல்லது இழுத்து மூடிவிடலாம் என மத்திய அரசின் ஆலோசனை அமைப்பான நிதி ஆயோக் பரிந்துரைத்துள்ளது. முக்கிய துறைகளின் செயலாளர்களும் நிதி ஆயோக்கின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அடுத்தகட்ட பணிகளுக்காக அமைச்சரவை குழுவின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த குழுவில் நிதியமைச்சர் மட்டுமின்றி சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் சம்மந்தப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாக அமைச்சகத்தை சேர்ந்த அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர். இந்த குழுவின் ஒப்புதலை தொடர்ந்து, நிதியமைச்சகத்தின் கீழ் வருகிற முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மை துறையானது பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவிடம் முன்மொழிதலை வழங்குகிறது.

77 பொதுத்துறை நிறுவனங்களை மட்டும் அரசின் வசம் தொடரலாம் என நிதி ஆயோக் மத்திய அரசுக்கு பரிந்துரைகளை தயாரித்துள்ளது. குறிப்பாக வேளாண் சார்ந்த அதன் இணை துறைகளில் பொதுத்துறை நிறுவனங்களும், கார்பரேட் நிறுவனங்களும் தொடரலாம் என நிதிக் குழு பரிந்துரைக்கிறது. விவசாயிகளுக்கு விதைகளை வழங்குவது, கொள்முதல் செய்வது மற்றும் பொது விநியோகத் திட்டத்திற்கு உணவுப்பொருட்களை வழங்குவது பொதுத்துறை நிறுவனங்களின் வசம் இருக்க வேண்டும் என்றும் அந்த பரிந்துரையில் உள்ளது.

ரயில்வே, அஞ்சலகங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனம், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர்கள், சிறுபான்மையினர் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஆதரவை வழங்கும் துறைகளை அரசின் வசம் இருந்து விலக்கிக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தரவுகளை பராமரிப்பதை அரசே தொடர வேண்டும் என்பது நிதி ஆயோக்கின் பரிந்துரை.

**ஆபத்தான காரணிகள் என்ன?**

உலகப் பொருளாதாரத்தின் பாதிப்பு தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனங்களை நேரடியாகப் பாதிக்கும். பல சாத்தியமான முதலீட்டாளர்கள் கூட, அத்தகைய காலங்களில் வர்த்தக நடவடிக்கைகளை விரும்புவதில்லை. வாஜ்பாயி ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில பரிவர்த்தனைகளுக்கான வழக்குகளே இன்னும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. பொருளாதார மந்த நிலை நீடிக்கும் சூழலில், தனியார் மயமாக்கலை மேற்கொள்வது, இருக்கும் நிலையை மேற்கொண்டு ஆபத்தாக்கும் என பொருளாதார அறிஞர் பிரணாப் சென் எச்சரிக்கிறார். பெரும் சரிவு ஏற்படும்போது கார்பரேட் நிறுவனங்கள் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, இருக்கும் திறன்களை விற்கக்கூடும் என்றும் அவர் கூறுகிறார்.

நன்றி- “தி இந்து” ஆங்கில நாளேடு
தமிழில் : ர. பிரகாஷ்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தமிழ்நாடு மாணவர் கழகம் இணைய வழியில் நடத்திய மே தின சிறப்புக் கருத்தரங்கம்

நமது கழக மாணவர் அமைப்பு தொடச்சியாக கருத்தரங்க நிகழ்வுகளை நடத்தி வருகிறது. அந்த வகையில் மே 1, 2021 சனிக்கிழமை சர்வதேச தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு மாலை 6 மணியளவில் “மே தின சிறப்புக் கருத்தரங்கம்” இணைய வழியில் நடைபெற்றது.

இந்நிகழ்வை கோவை மாவட்ட மாணவர் கழகத் தோழர் நிலா ஒருங்கிணைத்தார். இதில் “திராவிடக் கட்டமைப்பில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி” என்ற தலைப்பில் பொள்ளாச்சி சபரிகிரி உரையாற்றினார்.

எந்த ஒரு மாநிலமும் முன்னேற்றம் அடைய தொழில்துறைகள் வளர்ச்சியும், தொழிலாளர்கள் நலனும் இன்றியமையாதது. கடந்த 50 ஆண்டு கால திராவிட ஆட்சியில் ஊழலும்,இலஞ்சமும் தான் பெருகியுள்ளது. நாட்டின் வளங்கள் சுரண்டப்பட்டு மக்களின் முன்னேற்றம் தடைபட்டுக் கிடக்கிறது என்ற பொய் பிரச்சாங்கள் சில பாசிச அமைப்புகளாலும், நியாயமற்ற நடுநிலைவாதிகளாலும் பரப்பப்படுகிறது.

ஆனால் இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் அடையாத நவீன முன்னேற்றத்தை தமிழகம் அடைந்துள்ளதன் காரணம் திராவிடக் கட்சிகளின் ஆட்சி தான். இதைத் தெளிவாக எடுத்துரைத்து பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளைக் எடுத்துக்காட்டாய் கூறி, இனி அமையவிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடர்ந்து இது போன்ற நலத்திட்டங்கள் வரும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்பதை வலியுறுத்தி சமூகநீதி ஆட்சிக்கு வாழ்த்துக்களைச் சொல்லி தனது உரையை நிறைவு செய்தார்.

கருத்தரங்கத்தின் சிறப்புரையாக தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி “பெரியாரியல் பார்வையில் மே தினம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இந்தியாவில் மட்டுமே வர்க்க பேதத்தோடு இணைந்த வர்ண பேதமும் இருக்கிறது. இந்தியாவின் ஜாதியக் கட்டமைப்பு சமூகத்தில் வர்க்க ரீதியில் அதாவது “பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் அடைவதிலும் மற்றும் உயர்பதவிகளை பெறுவதன் அடிப்படையிலும்” ஏற்றத் தாழ்வுகளை முழுமையாக ஒழிக்க முடியாது என்பது நிதர்சனம். காரணம் இங்குள்ள சமூகத்தின் ஜாதிய மனநிலை.

எனவே இந்த மே தினக் கொண்டாட்டத்தை இந்தியாவிற்கு எப்படிப் பொருத்திப் பார்க்க வேண்டும் என்பது குறித்து திராவிட சித்தாந்த அடிப்படையிலும் பெரியாரின் சிந்தனைகளின் அடிப்படையிலும், நமது திராவிட இயக்கமானது தமிழகத்தை இந்தியாவில் இருந்து வேறுபடுத்தி காட்டியுள்ளது என்று குறிப்பிட்டார். தமிழக தொழிலாளர் அமைப்புகளுக்கும் திராவிட இயக்கங்களுக்கும் இருந்த ஆழமான உறவுகளையும் பெரியாரின் சமதர்ம அறிக்கையை விளக்கியும் உரையாற்றினார்.

இறுதியில் ஒருங்கிணைப்பாளர் நிலா நிகழ்வில் கலந்துகொண்ட தோழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் நன்றி கூறினார்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களை கடந்தகால ‘இந்து’ வரலாற்றுப் பெருமிதத்தோடு இணைத்த நாம் தமிழர் கட்சி, ஜாதி அடிப்படையில் தூய்மைத் தமிழர்களைப் பிரித்தெடுத்து கூறு போட்டது. தி.மு.க. தலைவர்கள் பலரும் பிற மொழிக்காரர்கள்; அவர்கள் சுத்தமான தமிழர்கள் அல்ல; எனவே தான் தமிழர்கள் உரிமைக்கு துரோகம் செய்கிறார்கள் என்று பிரச்சாரம் செய்தது. பா.ஜ.க.வும் - நாம் தமிழர் கட்சியும் ஒரே புள்ளியில் மய்யம் கொண்டு தி.மு.க. எதிர்ப்பை முன் வைத்தன.

மூன்றாவதாக தேர்தலில் ஜாதி முக்கிய காரணியாக மாற்றப்பட்டது. அ.இ.அ.தி.மு.க. தலைவர்கள், முதலமைச்சர் உள்ளிட்டோர் பெரும் எண்ணிக்கையில் உள்ள தங்கள் ‘வெள்ளாளர் கவுண்டர்’ ஜாதி அடையாளத்தை ‘இலைமறை காய்மறையாக’ முன்னிறுத்தினர். வன்னியருக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீட்டை அவசர அவசரமாக அறிவித்தார் எடப்பாடி பழனிச்சாமி. அந்த முடிவு அ.இ.அ.தி.மு.க.வும் சில கூடுதல் இடங்களில் வெற்றியைத் தந்திருக்கலாம். ஆனால் இந்த முடிவு தேர்தல் களத்தை ஜாதி அடிப்படையில் அணி திரட்டும் முயற்சிக்கே வித்திட்டது.

ஆனாலும் தமிழ்நாடு மக்கள் பொதுச் சிந்தனையில் ஊறிப் போன திராவிட உணர்வுகள் மேலும் வலிமையடைவதற்கே இவை பயன்பட்டிருப்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. நீட், ஜி.எஸ்.டி., புதிய கல்விக் கொள்கை வழியாக மாநில உரிமைகளை ஒன்றிய அரசு பறிப்பதையும் ஆளும் கட்சி மத்திய அரசிடம் சரணடைந்து விட்டதையும் தி.மு.க. தனது பரப்புரையில் முன் வைத்தது.

இந்த நிலையில் தி.மு.க., திரிணாமுல் (மே. வங்கம்), மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் (கேரளா) கட்சிகளின் வெற்றிகள் இந்தியாவுக்கு ஒரு பாடத்தை வலிமையாக உணர்த்துகின்றன. இது ஒற்றை நாடு அல்ல; பன்முகத் தன்மைக் கொண்ட நாடு என்பதே அந்தப் பாடம். இக்கட்சிகள் மாநிலம் சார்ந்து இயங்குவதாகும்.

பா.ஜ.க.வினரால் தேச விரோத கட்சியாக எந்தக் கட்சி சித்தரிக்கப்பட்டதோ, அதே கட்சி அரசியல் சட்டத்யையும் அதன் மதச்சார்பின்மை, கூட்டாட்சி கோட்பாடுகளையும் கட்டிக் காப்பாற்ற வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. இந்தியாவை கூட்டாட்சி நோக்கி அழைத்துச் செல்லும் போக்குகளையே தேர்தல் முடிவுகள் உருவாக்கி இருக்கின்றன.

நிதிச் சுமை அதிகார பறிப்புகளுக்கிடையே வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய சவால்கள் தி.மு.க.வை எதிர்நோக்கியிருக்கின்றன. தனியார் கல்வி நிறுவனங்களுக்கும், அரசு கல்வி நிறுவனங்களுக்குமிடையே உள்ள ‘இடைவெளி’ நீக்கப்பட்டு, சமூக நீதி அடிப்படையிலான கல்வி கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

தேர்தல் அறிக்கையில் தந்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடமையும் காத்திருக்கிறது. மேற்கு மண்டலத்தில் அ.தி.மு.க. வெற்றிக்கு ஜாதி துணை நின்றது. வடக்கு மண்டலத்தில் ஓரளவு பா.ம.க. வெற்றிக்கும் ஜாதி துணை நின்றிருக்கிறது. இந்த சூழலில் தி.மு.க. தனது சமூக நீதியை உள்ளக்கிய ஜாதி எதிர்ப்பு செயல் திட்டங்களை உண்மையான சமூகக் கவலையுடன் முன்னெடுக்க வேண்டும். அப்போது தான் தி.மு.க. எதிர் காலத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். சிவில் சமூகத்தில் இளைஞர்களுக்கான ஜாதி எதிர்ப்புக்கான சமூக நீதியை உள்ளடக்கிய திட்டங்களை தி.மு.க. ஆட்சி முனைப்புடன் அமுல்படுத்த வேண்டும்.

---

### அமெரிக்காவின் ‘தி வாஷிங்டன் போஸ்ட்’ பத்திரிகை குற்றச்சாட்டு

# இந்தியாவின் கொரோனா பேரழிவுக்கு மோடியே காரணம்

இந்தியா இன்று சந்திக்கும் அபாயகரமான கொரோனா பேரழிவுக்கு பிரதமர் நரேந்திர மோடியே காரணம் என்று அமெரிக்காவின் புகழ்பெற்ற பத்திரிகையான ‘தி வாஷிங்டன் போஸ்ட்’ கட்டுரை குற்றம் சாட்டியுள்ளது.

புளூமிங்டனில் உள்ள இந்தியானா பல்கலைக்கழக அரசியல் அறிவியல் பேராசிரியரும், அண்மையில் வெளியான ‘இந்தியாவின் தேசிய பாதுகாப்பு’ (The Oxford Handbook of India’s National Security) என்றநூலின் ஆசிரியருமான சுமித் கங்குலிஇந்த கட்டுரையை எழுதியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் தற்போதைய கொரோனா தொற்று நெருக்கடி அதிர்ச்சியைத் தருகிறது. கொரோனா தொற்று விகிதம் நாளொன்றுக்கு 3 லட்சத்திற்கு அதிகமாக உள்ளது. மே மாதத்தின் நடுப்பகுதியில் கொரோனா இறப்பானது, நாளொன்றுக்கு 5 ஆயிரம் என்ற அளவிற்கு உச்சம் அடையும் என்று தொற்றுநோயியல் நிபுணர்கள் நம்புகின்றனர். உலகின் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தி மையமாக இந்தியா இருக்கிறது. ஆனாலும் இந்தியா தனது1.3 பில்லியன் மக்களில் 2 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போட்டுள்ளது. ஆன்டிவைரல் மருந்தான ரெம்டெசிவிருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நண்பர்கள், உறவினர்கள் மற்றும் சமூக ஊடகங்களில் அந்த மருந்தை இரவல் கேட்கும் நிலைக்கு கொண்டுபோய் மக்களை தள்ளிவிட்டுள்ளது. மருத்துவமனைகளில் படுக்கை கூட கிடைக்காமல் மக்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவின் சுகாதாரப் பாதுகாப்பு உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை குறைபாடுகள் நன்கு அறியப் பட்டவையே. என்றாலும் கடுமையான பொதுமுடக்க நடவடிக்கைகள் மூலம்,2021 ஜனவரி மாதத்திற்குள் கொரோனா முதல் அலைகளை நாடுகட்டுப்படுத்தியது. 2020-இல் அமல் படுத்தப்பட்ட 21 நாள் பொதுமுடக்கம் குறைந்த காலத்திற்கு வைரஸ் பரவுவதைத் தடுத்தது.ஆனால், இந்த கால அவகாசத்தை, முற்றிலுமாக கொரோனா தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான திட்டமிடல்களுக்கு பிரதமர் மோடி பயன்படுத்தவில்லை. தனிப்பட்ட பாதுகாப்புக் கருவிகளை உருவாக்குவதற் கும், தடுப்பூசி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அல்லது சோதனைகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, வழக்கம்போல தனது வேலையை ஆரம்பித்தார். எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை கேலி செய்வது, அரசியல் எதிர்ப்பாளர்களை துன்புறுத்துவது மற்றும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில்இந்தியா வைரஸை ஒழித்து விட்டதாக தம்பட்டம் அடித்து, தனது பராக்கிரமத்தை வெளிப்படுத்த முயன்றார். அதுமட்டுமல்ல, 5 மாநில சட்டமன்றத் தேர்தல்களில், மோடி தன்னை முழுமையாக பிரச்சாரத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். கொரோனா அபாயம் குறித்த தொலைநோக்குப் பார்வை இல்லாமல் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டார்.

கங்கையில் உள்ள ஹரித்துவார் நகரில் இந்து மத விழாவை (கும்பமேளா) நடத்த மோடி அனுமதித்தார். கும்பமேளா வழக்கமாக மூன்று மாதங்களுக்கு நீடிக்கும் - சுமார் பத்து லட்சத்திற்கும் அதிகமான யாத்ரீகர்களை ஈர்க்கும் திருவிழா இது என்ற நிலையில், கொரோனா அபாயத்தையும் தாண்டி, அந்த கும்பமேளாவை மோடி அனுமதிக்கிறார் என்றால், அதற்கான அரசியல் காரணம் வெளிப்படையானது. இது இந்து நம்பிக்கையாளர்களின் வாக்குகளை பிரதமர் மோடிக்கும் அவரது கட்சிக்கும் கிடைப்பதை உத்தரவாதம் செய்யும் என்பதுதான். மோடியைப் பொறுத்தவரை, நாட்டு மக்களின் நல்வாழ்வை விட, அவரது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல், அரசியல் நாடகம் மற்றும் தேர்தல் வெற்றிகள்தான் முக்கியமானவை. மோடியும்அவரது அரசாங்கமும் இந்தியாவின்குடிமக்கள் மீது அக்கறை கொண்டிருந்திருந்தால், அவர்கள் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களையும் திருவிழாவையும் மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால், அவர்களின் மகிழ்ச்சியற்ற தேசிய தடுப்பூசி இயக்கம், இன்று மக்களைப் பயமுறுத்துகிறது.

சில உள்ளூர் கட்சித் தலைவர்கள் யோகா பயிற்சி மற்றும் பசுமாட்டின் சிறுநீரை கிருமிநாசினியாகப் பயன்படுத்துவது வைரஸைத் தடுக்கும் என்று பரிந்துரைத்தனர். பாஜகவின் வெளியுறவுத் துறையின் தலைவர் விஜய் சவுதைவாலே, பசுவின் சிறுநீர் மற்றும் மஞ்சளை உட்கொள்வதை ஊக்குவித்தார். தொழில்துறை நகரமான துர்காபூரில் ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பாஜகமேற்கு வங்கத் தலைவர் திலீப் கோஷூம்பசுவின் சிறுநீரைப் பரிந்துரைத்தார்.

தொற்றுநோயை கையாளும் விவகாரத்தைப் போலவே, இதற்கு முன்பு போதிய முன்னெச்சரிக்கை இல்லாமல் பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டிஅமலாக்க முடிவுகளை மோடி மேற் கொண்டார். இது தொடர்பாக சம்பந்தப் பட்ட வல்லுநர்கள் யாருடனும் அவர் ஆலோசிக்கவில்லை. இதன் விளைவாக நாட்டில் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th May 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN